ஆலங்குளம் அரசு மருத்துவ மனை

*2265—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆலங்குளத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்வதற்குரிய கருவிகளும், மருத்துவரும் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்நிலையை மாற்ற நடவடிக்கை எடுக் கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :

(அ) மேல்நிலைப்படுத்தப்பட்டுள்ள ஆலங்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்குரிய மருத் துவர்கள் உள்ளனர். மேலும் அறுவை சிகிச்சை செய்வதற்கான கருவிகளும் அங்கே இருக்கின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஆலங்குளம் மற்றும் அதன் அருகாமையில் உள்ள கிராம மக்கள் ஆலங்குளம் பொது மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சைப் பெறுகிறார்கள். அங்கே எக்ஸ்ரே போன்ற கருவிகள் இல்லை. நவீன அறுவை சிகிச்சை கருவிகளும் இல்லை. மருத் துவத்திற்கு வருகின்ற, பிரசவத்திற்கு வருகின்ற தாய்மார்களை கூட, அங்கே சிகிச்சை முறைகள் இல்லாத காரணத்தால் அவசர அவசரமாக பாளையங்கோட்டைக்கு எடுத்துச் செல்லுகின்ற ஒரு இக்கட்டான நிலை ஏற்படுகிறது, ஆதலால் அதைத் தவிர்ப்ப தற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அப்-கிரேடட் பிரைமரி ஹெல்த் சென்டர் என்ற அடிப்படையில் மேம்படுத்தப் பட்ட சுகாதார நிலையம் இருக்கிறது. அங்கே இருக்கிற அறுவை சிகிச்சை நிலையத்தில் 1989ஆம் ஆண்டு ஆகஸ்டு வரை 62 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற கருவிகள் அந்த இடத்திற்கு வேண்டுமென்று மக்கள் விரும்பினால், அது குறித்து அடுத்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல அரசு மருத்துவமனைகளில் உள்ள காஸ்ட்லி மெடிசன்களையெல்லாம் அங்குள்ள பொறுப்பு,

1990 சனவரி 25]

மருத்துவர்களால் எடுத்துச் செல்லப்பட்டு தனியாக மருத்துவத் தொழில் நடத்தி பணம் சம்பாதிப்பதும், அரசு திட்டங்களான குடும்பநலத் திட்டம், கருவுற்ற மகளிர்களுக்கு உதவி அளிப்பது போன்றவற்றில் முறைகேடுகள் நடப்பதும் அரசு அறியுமா ? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இதுபோன்ற குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால் நிச்சயம் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் நகராட்சிக்கு ஜெனரேட்டர்.

* 3207—திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காமராஜ் நீர்த்தேக்கத்தில் வேண்டிய தண்ணீர் இருந்தும் மின்தட்டுப்பாட்டில் நீர் விநியோகம் செய்ய முடியாததால், ஜெனரேட்டர் ஒன்று நகராட்சி வாங்கிக் கொள்ள அரசைக் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காமராஜ் சாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் அடிக்கடி மின்சக்தி தடைபடுவதால் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு தண்ணீர் இருந்தும் நகரின் குடிநீர் விநியோகத்திற்கென பாதி அளவுகூட நீர் கொடுக்க முடியாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. 200 கே.வி. திறன் உள்ள ஒரு டீசல் ஜெனரேட்டரை வாங்கி அமைக்க, அதற்காக 3 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. மேலும் அந்த அணையில் போதிய நீர் பிடிப்பு ஏற்படாத அளவுக்கு ஷட்டருடைய கயிறு அறுந்து இருப்பதனால், ஸ்டீல் கயிறு அறுந்து இருப்பதால் ஷட்டர் மூடப்பட்டிருக்கிறது. அதை மராமத்து செய்து நீரைத் தேக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS